# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1985 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம்

---

*[1985, ஜூன் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1985, ஜூன் மாதம் 21 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 — தபாற் செலவு : சதம் 60

# 1985 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம்

[1985, ஜூன் மாதம் 21 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஒ.—47/82
1669

**மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1985 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவிற்கான (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 105 ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(இ) வாகடகர்களாக வினைத்திறமைச் சான்றிதழ்கள் அல்லது தேர்ச்சிச் சான்றிதழ்கள் ; அத்துடன்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 56 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) ஆளெவரும், அவர் நல்லொழுக்கம் கொண்டவராகவும் அத்துடன்—

(அ) ஆறும் அட்டவணையில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஈராண்டுகளுக்கு தொழில் பயிலுநர் ஒருவராகச் சேவையாற்றி அதன்பின்னர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் தேதியன்றோ அதற்கு முன்னரோ கல்லூரிப் பேரவையினால் வழங்கப்படும் வாகடகர் ஒருவராக வினைத்திறமைச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றவராகவும் இருந்தாலொழிய ; அல்லது

(ஆ) சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாகடகர்களுக்கான பயிற்சித் திட்டத்தைப் பின்பற்றி கல்லூரிப் பேரவையினால் வழங்கப்படும் வாகடகர் ஒருவராக தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருந்தாலொழிய ; அல்லது

(இ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக் கழகத்தினால் அளிக்கப்படுகின்றதான வாகடவியலில் பட்டமொன்றை அல்லது திப்புளோமா ஒன்றை வைத்திருந்தாலொழிய ; அல்லது

(ஈ) ஓர் அப்போதிக்கரியாக இருந்தாலொழிய ; அல்லது

(உ) ஒரு பெருந்தோட்ட அப்போதிக்கரியாக இருந்தாலொழிய, வாகடகர் ஒருவராகப் பதிவு செய்யப்படுதல் ஆகாது.".

ஏ 083812—2,815 (05/85)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவானது, அதன் (அ) என்னும் பந்தியை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவானது "வாகடவியல் சட்டங்கள்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வட்டவணையில் இருந்து—

(அ) "வாகடவியல் சட்டங்களின்கீழ் விண்ணப்பகாரர் பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்து" என்ற தலைப்பின் கீழான வெளிப்படுத்துகையை விட்டு விடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) "வாகடவியல் சட்டங்களின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு விண்ணப்பகாரர் தகைமையுடையவராயிருக்குமிடத்து" என்ற தலைப்பின் கீழான வெளிப்படுத்துகையை விட்டு விடுவதன்மூலமும் ;

(2) "கல்லூரிப் பேரவையினால் வழங்கப்பட்ட வாகடர் ஒருவராக சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து.". என்ற தலைப்பிற்குப் பதிலாக, "கல்லூரிப் பேரவையினால் வாகடர் ஒருவரென வழங்கப்பட்ட வினைத்திறமைச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து." என்னும் தலைப்பை இடுவதன்மூலம்." ;

(3) "கல்லூரிப் பேரவையினால் வாகடர் ஒருவரென வழங்கப்பட்ட வினைத்திறமைச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து" என்னும் தலைப்பின் கீழான வெளிப்படுத்துகையை உடனடுத்துப் பின்வரும் புதிய வெளிப்படுத்துகையை உட்புகுத்துவதன்மூலம் :—

"கல்லூரிப் பேரவையினால் வழங்கப்பட்ட வாகடர் ஒருவரென தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து.

(விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான், இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்துகிறேன் :—

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காட்டப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும் வாகடகர் ஒருவரெனக் கல்லூரிப் பேரவையினால் வழங்கப்பட்டதுமான தேர்ச்சிச் சான்றிதழில் பெயர் குறிப்பிடப்பட்ட (பெயர்) ஆள் நானே.

(விண்ணப்பகாரரின் கையொப்பம்)

............ ஆம் ஆண்டு ............... மாதம் ............ ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ............... மாதம் ............ ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்.)

சமாதான நீதிவான்
அல்லது சத்திய ஆணையாளர்."

(4) "கல்லூரிப் பேரவையினால் வழங்கப்பட்ட வாகடகர் ஒருவரெனும் தேர்ச்சிச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து." என்னும் தலைப்பின் கீழான வெளிப்படுத்துகையை உடனடுத்துப் பின்வரும் புதிய வெளிப்படுத்துகையை உட்புகுத்துவதன் மூலம் :—

"1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்தினால் அளிக்கப்பட்டதான வாகடகவியலில் பட்டமொன்றை அல்லது திப்புளோமாவொன்றை விண்ணப்பகாரர் வைத்திருக்குமிடத்து

(விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன் :—

தற்போது சமர்ப்பிக்கப்பட்டதும், எனக்குக் காட்டப்பட்டதும், அ என அடையாளமிடப்பட்டதும், (பல்கலைக்கழகத்தின் பெயர்) பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டதுமான சான்றிதழில் பெயர் குறிப்பிடப்பட்ட (பெயர்) ஆள் நானே.

(விண்ணப்பகாரரின் கையொப்பம்)

............ ஆம் ஆண்டு ............... மாதம் ............ ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

............ ஆம் ஆண்டு ............... மாதம் ............... ஆம் நாளாகிய இன்று என் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

(வெளிப்படுத்துகை ஏற்பவரின் கையொப்பம்.)

சமாதான நீதிவான் அல்லது
சத்திய ஆணையாளர்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*